# SG Digital

## சிங்பாஸ் மொபைல் செயலியின் பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

**சிங்பாஸ் மொபைல்** செயலியுடன் நீங்கள் சேவைகளை அணுகுவதற்கு கைரேகை, முக அடையாளம் அல்லது மறைச்சொல்லைப் பயன்படுத்தி, முக்கியமான விவரங்களைக் கைவசம் வைத்திருக்கலாம். அதோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட பலதுறை மருந்தகங்களில் அடையாளப் பத்திரங்களைக் காட்டாமல் விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடி எளிதாகப் பதிவு செய்யலாம்.

## படிநிலை 1 உங்கள் திறன்பேசியில் சிங்பாஸ் மொபைல் செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, சிங்பாஸ் மொபைல் செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள். அந்தச் செயலி **அரசாங்கத் தொழில்நுட்ப அமைப்பால்** உருவாக்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், 'Get' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், 'Install' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 2 ஒருமுறை விவரங்களைப் பதிவு செய்திடுங்கள்

பதிவு செய்வதற்கு, உங்களுக்குத் தேவை:

1. இணைய இணைப்பு
2. சிங்பாஸ் அடையாளப் பெயரும் மறைச்சொல்லும்
3. பொருந்துமாயின், உங்களது தற்போதைய 2FA இரட்டை மறைச்சொல் (குறுந்தகவல் அல்லது ஒன்கீ சாதனம்)




3. உங்கள் அடையாளச் சான்றிதழில் உள்ள உங்களது விவரங்களைச் சரிபாருங்கள்.




4. மறைச்சொல்லை அமைத்திடுங்கள் மற்றும் / அல்லது கைரேகை / முக அடையாளத்தை நிறுவுங்கள்.




5. சேவைகளை அணுகும் வழிமுறையைப் படித்து தெரிந்துகொள்ளுங்கள்.

## படிநிலை 3 சேவைகளை அணுக அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பலதுறை மருந்தகங்களில் பதிவு செய்ய சிங்பாஸ் மொபைல் பயன்படுத்துங்கள்

6. 'Scan' மீது தட்டுங்கள்.



7. உட்பதிவு பக்கத்தில் / முகப்பில் சிங்பாஸ் QR குறியீட்டை வருடுங்கள்




8. கைரேகை, முக அடையாளம் அல்லது மறைச்சொல் பயன்படுத்தி உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துங்கள்.

**அரசாங்கச் சேவைகளை அணுகுங்கள்** (எ.கா. மசேநி, IRAS, வீவக)




8. உங்கள் விவரங்களை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்திடுங்கள்.

**தேர்ந்தெடுக்கப்பட்ட பலதுறை மருந்தகங்களில் பதிவு செய்யுங்கள்**




## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- உங்களது உட்பதிவு விவரங்களை யாரிடமும் சொல்லாதீர்கள். ஏனெனில், உங்கள் கணக்குகளும் தனிப்பட்ட விவரங்களும் அனுமதியின்றி அணுகப்படலாம்.
- உங்கள் திறன்பேசியில் உங்களது சொந்த கைரேகையையும் முக அடையாளத்தையும் மட்டுமே பதிவு செய்யுங்கள்.
- உங்கள் பரிவர்த்தனையைச் செய்து முடித்தவுடன் மின்சேவையிலிருந்து எப்போதும் வெளியேறிவிடுங்கள்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY